1989 நவம்பர் 2]

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எம்.பி.யாக ஆகியிருப்பார் என்று நான் சொன்னதாகச் சொன்னால் நான் சீட் கொடுக்கிற மாதிரி ஆகிவிடும். எம்.பி.யாக ஆனாலும் ஆகியிருப்பார் என்று தான் சொன்னேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்த நிலையில் நீங்கள் இல்லை என்பதும் எங்களுக்கு மிக நன்றாகத் தெரியும். (சிரிப்பு).

10-30 மணி

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனால்தான் நானே ஜாக்கிரதையாகச் சொன்னேன், அவர் எம்.பி.யாகவும் ஆகியிருக்கலாம். அல்லது வேறு ஏதாவது தொழில் செய்ய வேண்டும் என்றாலும் செய்திருக்கலாம். அவருடைய பிரைவேட் ரைட் பாதிக்கப்படுகிறதே என்பதற்காகத்தான் அந்த ராஜினாமா ஏற்கப்பட வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தினேன்.

(ஆ) சென்னை-செங்கை-அண்ணா மாவட்டங்களிலிருந்து மீன் பிடிக்கச்-சென்றவர்களை ஆந்திரப் பகுதியில் பிடித்து வைத்துள்ளது குறித்து.

திரு. எஸ். திருநாவுக்கரசு: இன்னொரு முக்கியமான பிரச்சினை. சென்னை, மற்றும் செங்கற்பட்டு மாவட்டங்களிலேயிருந்து மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள், விசைப் படகுகள் மூலமாக ஆந்திரப் பகுதியிலே மீன் பிடிக்கச் செல்கிற போது—அங்கே அதற்கு என்று யாரோ ஒரு புரோக்கர் தனியாக இருக்கிறார் போல் தெரிகிறது, அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், மொத்தமாக அங்கேயிருக்கிற மீனவர்களை எல்லாம் பிடித்து வைத்துக் கொண்டு, இங்கேயிருந்து ஸ்டீம் போட்டுகள் மூலமாகப் போகிறவர்களைப் பிடித்துக் கொண்டு போய் வழக்குகள் பதிவு செய்கிறார்கள். சமீபத்திலே 22-ம் தேதி, பத்தாவது மாதத்திலே சுமார் 61 பேர்கள் மேலே வழக்கு போட்டிருக்கிறார்கள். சென்னையிலே இருக்கிற விசைப் படகுகளுக்குச் சொந்தக்காரர்கள் செங்கற்பட்டிலே கடற்கரைக்கு ஓரத்திலே இருக்கிற விசைப் படகுகளுக்குச் சொந்தக்காரர்கள் ஆந்திரப் பகுதி செல்கிறார்கள். ஆந்திரப் பகுதியில் உள்ள கடற்கரை ஓரங்களில் அவர்கள் மீன்பிடிக்கிற போது, அந்தப் பகுதியிலே தான், நெல்லூர் மாவட்டத்திலே தான் அந்த கேசைப் போட்டிருக்கிறார்கள்—61 பேர்கள் மீது, வழக்கு போட்டிருக்கிறார்கள்

அது மட்டுமல்ல, 2 லட்சத்து 77 ஆயிரம் ரூபாய் பணத்தைக் கட்டினால்தான் பிடித்த அந்த 10 படகுகளை விடுவோம் என்று சொல்லி, அந்த 2 லட்சத்து 77 ஆயிரம் ரூபாய் பணத்தைக் கட்டியதற்கான சலானும் இதிலே இருக்கிறது. இதையும் மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கு கொண்டு

வருகிறேன். வழக்கு போட்டதினுடைய பட்டியலும் இதில் இருக்கிறது. இது தொடர் நிகழ்ச்சியாக, பணம் பறிக்கிற முயற்சியோடும், நம்முடைய பகுதியிலேயிருந்து தமிழ் நாட்டிலேயிருந்து மீன் பிடிக்கப் போகிற மீனவர்களுக்கு, விசைப் படகுச், சொந்தக்காரர்களுக்கு தொல்லை கொடுக்கிற நோக்கத்தோடும் ஆந்திரப் பகுதியிலே நெல்லூர் மாவட்டத்திலேயும், அதைச் சுற்றியுள்ள இடங்களிலேயும் இது நடப்பதாகத் தெரிகிறது. எனவே இது குறித்து உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆந்திர முதலமைச்சரோடும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடும் பேசி, நம்முடைய பகுதி மீனவர்களுக்கு, விசைப் படகுச் சொந்தக்காரர்களுக்கு, அந்தத் தொல்லைகளிலேயிருந்து நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இதுபோன்ற ஒரு பிரச்சினையை ஏற்கெனவே நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் இந்த மன்றத்திலே எழுப்பியதாக எனக்கு நினைவு. அப்போது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஆந்திர மாநிலத்திற்கு நம்முடைய போலீஸ் அதிகாரிகள் அனுப்பப்பட்டு, அவ்வாறு அங்கே பிடித்து வைக்கப்பட்டவர்களை மீட்டு வந்திருக்கிறார்கள். இப்போது சொல்லப்படுகிற இந்தச் செய்தியிலும் இரண்டு அரசுகளுக்கும் சம்பந்தம் இல்லாத ஒரு நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. ஆந்திர அரசுக்கும் தெரியாத வகையிலே, சில பேர்கள் கோஷ்டியாகச் சேர்ந்து கொண்டு, தமிழக மீனவர்கள் அந்த வட்டாரத்திற்குச் செல்கிற நேரத்திலே அவர்களைப் பிடித்து இழுத்துச் சென்று, ஏதோ பணயக் கைதிகளைப் போல் வைத்து பணம் பெறுகிறார்கள் என்பது உள்ளபடியே ஒரு பெரிய சமுதாயக் குற்றம். இதை ஆந்திர அரசும் அனுமதிக்காது என்று நான் நம்புகிறேன். ஏற்ற நடவடிக்கைகள் தமிழக அரசின் சார்பாக எடுக்கப்படும். ஆந்திர முதலமைச்சரோடும் நான் இது குறித்து பேசி, உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) போலீஸ் கமிஷன் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, முந்தைய திராவிட முன்னேற்றக் கழக அரசு 1969-லே ஒரு போலீஸ் கமிஷனைப் போட்டதற்குப் பின்னாலே, 20 ஆண்டுகளுக்குப் பின்னால் இப்போதும் ஒரு போலீஸ் கமிஷனை, நமது திரு. சபாநாயகம் அவர்களுடைய தலைமையிலே 6 பேர்களைக் கொண்ட குழுவாக அமைத்திருக்கிறது. இந்தக் குழு இந்தப் போலீஸ் இலாக்காவை சீரமைக்கின்ற முழுப் பொறுப்பையும், அதற்கான வழிவகைகளைக் காண்கின்ற பொறுப்பையும் ஏற்றிருக்கிறது. வீட்டுவசதி, பொது நலன், போலீசினுடைய அதிகாரம்,